# தி.மு.க. தயவில்தான் தற்போதைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இங்கு நம்முடைய கஜா என்கிற கஜேந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார், "நான் பல ஆண்டு காலம் அ.தி.மு.க.விற்குப் பணியாற்றி இருக்கிறேன்; இரண்டு முறை தேர்தல் களத்தில் ஈடுபட்டு இருக்கிறேன்; இருந்தாலும், அந்த இயக்கத்தில் இருந்த போது நான் விசுவாசமாகப் பணியாற்றி இருக்கிறேன்" என்பதை வெளிப்படையாக அவர் எடுத்துச் சொன்னார். நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

எப்போதுமே ஒருவன், ஒரு தொண்டனாக இருந்தாலும் சரி, ஒரு செயல் வீரனாக இருந்தாலும் சரி, ஒரு தளகர்த்தராக இருந்தாலும் சரி, தளபதியாக இருந்தாலும் சரி, தலைவராக இருந்தாலும் சரி, தான் இருக்கும் கட்சிக்கு விசுவாசமாக இருந்திட வேண்டும். எனவே, நிச்சயமாக தி.மு.க.வில் இணைந்திருக்கும் கஜேந்திரன் அவர்கள், நிச்சயமாக தி.மு.க.விற்கு விசுவாசமாக இருந்து பணியாற்ற இருக்கிறார் என்பதை இதன் மூலமாக அறிந்து கொள்கிறேன். அவர் மட்டுமல்ல; இங்கு வந்திருக்கும் நீங்களும் அப்படித்தான் இருக்கப் போகிறீர்கள்.

தி.மு.க.வினுடைய வரலாறு என்பது, 1949 இல் தொடங்கி, அதற்குப் பிறகு நடைபெற்ற 1952 இல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை என்று சொன்னாலும், 1957ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களில் வெற்றி பெற்றோம். அதற்குப் பிறகு, 1962இல் தேர்தல் களத்தில் ஈடுபட்டு, நாம் எதிர்க்கட்சி வரிசையில் இடம்பெறும் அளவிற்கு 50 இடங்களில் அன்றைக்கு வெற்றி பெற்றோம். அதற்குப் பின்னால் 1967இல் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றோம்.

அண்ணா மறைவிற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணியாற்றினார். அதற்குப் பிறகு 1971இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றோம். 1971இல் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில்தான், 1975இல் இந்தியாவில் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது. அந்த நெருக்கடி நிலையை நாம் எதிர்த்தோம். அந்த நெருக்கடி நிலையை எதிர்த்தால் ஆட்சி பறிபோகும் என்பதைத் தெரிந்தே எதிர்த்தோம். நாம் கவலைப்படவில்லை.

### நெருக்கடி நிலையை எதிர்த்ததால் ஆட்சி கலைப்பு!

கலைஞர் அவர்கள் அதைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல், "ஆட்சி நமக்கு முக்கியமல்ல; ஜனநாயகம் தான் நமக்கு முக்கியம்" என்று கருதி, அந்த நெருக்கடி நிலையை எதிர்த்து, சென்னை கடற்கரையில் லட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி, தீர்மானம் போட்டு அன்றைக்கு நிறைவேற்றினார்கள். "நெருக்கடி நிலையை ரத்து செய்யுங்கள்; கைது செய்து சிறையில் வைத்திருக்கும் தலைவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்யுங்கள்" என்று தீர்மானம் போட்டார்கள்.

அந்தத் தீர்மானம் போட்ட காரணத்தால், 1976 ஆம் ஆண்டு நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 ஆண்டு காலம் நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வர முடியவில்லை.

> "நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன்."

மீண்டும் 1989இல் ஆட்சிக்கு வந்தோம். 1991 இல், இலங்கையில் இருக்கும் தமிழர்களுக்கு தி.மு.க. துணை நிற்கிறது என்ற ஒரு பிரச்சாரத்தை நடத்தி, அதற்காக நம்முடைய ஆட்சியைக் கலைத்தார்கள்.

அதற்குப் பிறகு 1996இல் நாம் ஆட்சிக்கு வந்தோம். அதற்குப் பிறகு 2001இல் நடைபெற்ற தேர்தலில் தோற்றோம். 2006இல் ஆட்சிக்கு வந்தோம். 2011இல் தோற்றோம். அதற்குப் பிறகு 2021இல் ஆட்சிக்கு வந்தோம்.

இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், வெற்றி தோல்வி என்பது நம்மைப் பொறுத்தவரையில் மாறி மாறி வரும். அதற்காக வெற்றியைக் கண்டு வெறி கொண்டு அலைந்து கொண்டிருப்பதும் இல்லை; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் என்றைக்கும் பணியாற்றக் கூடியவன்தான் தி.மு.க.காரன் என்பதை இன்றைக்கு நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் தான், இன்றைக்கு வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருந்தாலும், ஆட்சிப் பொறுப்பை நாம் இழந்திருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில், நீங்கள் எல்லாம் இங்கு நம்முடைய கஜா என்கிற கஜேந்திரன் தலைமையில் வந்து சேர்ந்திருப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

### தி.மு.க. தயவில் தான் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது!

இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஏனென்றால், நாம் வெற்றி பெற வேண்டும்; தி.மு.க. தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்; எதிர்க்கட்சிகள் எல்லாம் தோற்க வேண்டும் என்ற நிலையில் தான் நாம் தேர்தல் களத்தைச் சந்தித்தோம். நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்று கருதி நம்மோடு கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே பல இடங்களில் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள், "நாங்கள் வருகிறபோது, எங்கள் கூட்டணிக் கட்சியின் தலைவர் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினிடத்தில் சொல்லிவிட்டுத் தான் வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்லிவிட்டுச் செல்லுகிற நேரத்தில் நான் சொன்னேன், "நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன்."

எனவே, நம்முடைய தயவோடு நடைபெறும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுப்போம், உறுதி எடுப்போம், உறுதி எடுப்போம் என்று கூறி, மீண்டும் வந்திருக்கும் உங்கள் அத்தனை பேரையும் வருக, வருக, வருக என்று வரவேற்று என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

இராஜபாளையம் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி நடத்தும்

# "முத்தமிழ் அறிஞர்" தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் எழுச்சிக் கவியரங்கம். கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கடற்கரைராஜ் பங்கேற்பு.

*விருதுநகர், ஜூன் 7 -*

தமிழின வரலாற்றின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்தனிப் பெருந்தலைவர், "முத்தமிழ் அறிஞர்" கலைஞர் அவர்களின் .பிறந்தநாள் விழா, சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.கடற்கரைராஜ் தலைமையில், விருதுநகர் வடக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இல. பிச்சைநாதன், மாவட்ட இலக்கிய அணித்தலைவர் புலவர் மாணிக்கம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் வெ. மரகதவேல், தொ.மு.ச. லிங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் இன்று (7.6.2026 ஞாயிறு மாலை 5 மணியளவில்) நடைபெறுகின்றது.

இராஜபாளையம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜோ.ஞானராஜ் வரவேற்புரையாற்றுகின்றார்.

"இயக்கத்தின் இலட்சியக் கவிஞர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் போற்றி வளர்க்கப்பெற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்கள் தலைமையில்,

"காலத்தாயின் காவியப் புதல்வர் கலைஞர்" என்னும் தலைப்பில் எழுச்சிக் கவியரங்கம் நடைபெறுகின்றது.

முன்னாள் அமைச்சர் பெருமக்களும், மாவட்டக் கழகச் செயலாளர்களுமான

கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. இருவரும் கவியரங்கத்தைத் தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்துகின்றார்கள்.

கவிஞர் வீ.ம.இளங்கோவன், கவிஞர், வழக்கறிஞர் சி.அன்னக்கொடி, கவிஞர்,பேராசிரியர் அலி பாவா, கவிஞர் வல்லம் தாஜ்பால், கவிஞர் ஆல. தமிழ்ப்பித்தன், கவிஞர் ஆ. மரிய எட்வின் ஆகியோர் முறையே,

சமத்துவப் பெரியார், சாதனை நாயகர், தனிப்பெருந் தலைவர், இனமானச் சூரியன், இலக்கியத் தென்றல், இன்னோர் அண்ணா ஆகிய தலைப்புகளில் அறிவெழுச்சிக் கவிதைகளை வழங்கவுள்ளார்கள்.

ஆசிலாபுரம் விக்னேஷ் திருமண மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கும் இவ்விழாவில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் இராணிஸ்ரீகுமார், மாநில தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளரான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. இராஜன், சாத்தூர் நகர்மன்றத் தலைவர் எஸ்.குருசாமி, மாவட்ட துணைச்செயலாளர் இராசா அருண்மொழி, இராஜபாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சரவண முருகன், வெம்பக்கோட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் V.. ஜெயபாண்டியன், வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளர் எம். கிருஷ்ணகுமார் உள்ளிட்ட கழக முன்னணியினர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் வீ.பொன்முருகானந்தம் நன்றி கூறுகிறார்.

---

புதுக்கோட்டை மு.பஷீர் அகமது தலைமை! தி.மு.க. அயலக அணி குவைத் நடத்திய

# நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா!

## குவைத்தில் உடன்பிறப்புகளோடு மிக எழுச்சியாக கொண்டாடப்பட்டது!

குவைத், ஜூன் 7–

கழகத் தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது அவர்களின் தலைமையில், இணைச் செயலாளர்கள் காட்டூர் ஆறுமுகம், முனசந்தை சிக்கந்தர், வேலம்புதுக்குடி மு.ஜியாவுதீன், ராயல் ஜி.பிரகாஷ் முன்னிலையில், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் புதுகை கனி, துணைச் செயலாளர் கண்டியூர் ரா.ஷாத் அன்வர்,இளைஞர் அணி இணைச் செயலாளர் விருதாச்சலம் பாஃரூக் காசிம் அவர்களின் ஒருங்கிணைப்பில் குவைத், பர்வானியா பகுதியில் அமைந்துள்ள ராயல் பேலஸ்ஸில் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் முத்தமிழறி ஞர் கலைஞரின் வரலாற்று சிறப்புமிக்க சாதனைகளையும், துரோகிகளின் துரோகங்களையும் ஆலோசகர் பெரியவர் ஆலஞ்சியார் அவர்கள் இளையோர்களுக்கு எடுத்துறைத்தார்கள். வரலாற்று சிறப்புமிக்க இந்நிகழ்வில் உடன்பிறப்புகளாய் அயலக தேசத்தில் ஒன்றினைந்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வவில் மனப்பாறை குமார்,வரகூர் செந்தில் ராஜா, காரைக்குடி மணி,சிதம்பரம் அல்தாப் உசேன், கண்டியூர் இலியாஸ், தளவாய் தினேஷ், வெங்கட், அறந்தாங்கி மணி,கறம்பக்குடி ஜாபர் சாதிக், கறம்பக்குடி அப்பாஸ், கொளத்தூர் கணேஷ், திட்டச்சேரி ஹமீத், மேலூர் கார்த்தி, ஜான் பாஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக வாணியம்பாடி அசோக்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

---

காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ள புதிய கூட்டணியில்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெயர் சேர்ப்பு!

## மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம்!

*சென்னை, ஜூன் 7-*

காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரவீன் சக்கரவர்த்தி, தமிழ்நாடு சமூக நீதி முற்போக்குக் கூட்டணி என தனக்குத் தானே புதிய கூட்டணி பெயர் வைத்துள்ளார். பிரவீன் சக்கரவர்த்தி சூட்டியுள்ள புதிய கூட்டணியின் பெயர் குறித்து காங்கிரஸ் கட்சிக்கே தெரியுமா? என சமூகவலைதளங்களில் கேள்வி எழுந்துள்ளது. மேலும், பிரவீன் சக்கரவர்த்தி சூட்டியுள்ள புதிய கூட்டணியின் பெயர் குறித்து வி.சி.க., ஐ.யூ.எம்.எல், இடதுசாரி கட்சிகளுக்கு தெரியுமா எனவும் நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இந்நிலையில், மாநிலங்களவை வேட்பாளர் தொடர்பான விவகாரத்தில், காங்கிரசை சேர்ந்த பிரவீண் சக்கரவர்த்திக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ. சண்முகம், புதிய கூட்டணியின் சார்பில், தான் மாநிலங்களவை வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருப்பதாகவும், அதில் CPM பெயரையும் குறிப்பிட்டு இருப்பது தவறானது என்றும் விளக்கம் அளித்துள்ளார். கூட்டணி அமைப்பது குறித்தோ, இந்த வேட்பாளருக்கு ஆதரவு கேட்டோ யாரும் தங்களை அணுகவோ, ஆலோசிக்கவோ இல்லை எனவும், தவெக ஆட்சி அமைக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதன் அடிப்படையில் ஆதரவு தெரிவித்துள்ளது என்பது ஏற்கனவே தெளிவாக கூறப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை!

# முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா !

## செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

*செஞ்சி, ஜூன் 7 -*

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழாவிழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாள் விழா வளத்தி ஊராட்சியில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் மோர் கூல் டிங்ஸ், இனிப்பு ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன், நாராயண மூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் பெருமாள் , செந்தில்குமரன், அர்ஷத், ஜெய்சங்கர், சரவணன், சக்தி, எஸ்.பி. சம்பத், மணியரசன், ஆர்சம்பத், ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி ஜெயக்குமார், துணை தலைவர் கோவிந்தராஜன், ஷேக் ஷரீப், தொண்டரணி ஆறுமுகம், உள்ளிட்ட ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

காங்கிரஸ் அறிவித்த புதிய கூட்டணியில்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை - தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறோம்!

## இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா.முத்தரசன் தகவல்!

*சென்னை, ஜூன் 7-*

புதிய கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை முத்தரசன் தி.மு.க. கூட்டணியில் தான் தொடர்கிறோம் இந்திய கம்யூனிஸ்ட் பா.ஜ.க. ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே, த.வெ.க.வுக்கு ஆதரவு தி.மு.க. கூட்டணியில் தான் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்கிறது இரா.முத்தரசன் பிரவீன் சக்கரவர்த்தி பதிவிற்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை.



காங்கிரசை சேர்ந்த ப்ரவீன் சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ள புதிய கூட்டணியில் தங்கள் கட்சி இல்லை என, இந்திய கம்யூனிஸ்ட் விளக்கமளித்துள்ளது.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா.முத்தரசன், தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே, த.வெ.க.-வுக்கு வெளியில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் ஆதரவு தெரிவித்துள்ளதை குறிப்பிட்டார்.

திமுக கூட்டணியில் தான் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்கிறது, அந்த நிலைதான் இன்றும் தொடர்வதாகவும் கூறியுள்ளார். திமுக கூட்டணியில்தான் தொடர்வதாக மு. வீரபாண்டியன் ஏற்கனவே தெரிவித்துள்ளதையும் இரா.முத்தரசன் சுட்டிக்காட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி பதிவிற்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் ப்ரவீன் சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ள புதிய கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை என்றும் இரா.முத்தரசன் மிகத் தெளிவாக தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் மூத்தத்தலைவர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வளர்த்தியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நல திட்ட உதவிகளை வழங்கினார். உடன்மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.